**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 158/2022**

**வா.சா.2 – கதிர்வேல்**

**<u>17–10–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

8. என்னிடம் காட்டப்படுவது நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமாணவாக்குமூலம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது நான் கையெழுத்திட்ட பிராது என்றால் சரிதான். நான் அனுப்பியதாக சொல்லும் வழக்கறிஞர் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது பொய் என்றும் வழக்கறிஞர் அறிவிப்பை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 03.06.2022 ல் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியதாக நான் சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்படி வழக்கின் விசாரணை மேற்படி தேதியில் வந்துவிட்டது என்றால் அதற்கு முன்பே அனுப்பிவிட்டேன். 10.05.2022 ல் பிராதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

9. என்னிடம் காட்டப்படுவது நீதிமன்ற ஆணையறின் அறிக்கை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கிழக்கு பார்த்து எனக்கு மதில் சுவர் உள்ளது என்றால் சரிதான். அந்த மதில் சுவரில் கதவு இல்லை என்றால் சரிதான். கதவு வைக்க முயற்சித்தபோது தான் இவ்வழக்கு ஏற்பட்டது. 2021 ல் கதவு வைக்க முயற்சி செய்தோம். இது வரை கதவு இல்லை என்றால் சரிதான். எனது சகோதரர் எழுதிகொடுத்தபோது கதவு இல்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்கே கதவு உள்ளது என்றால் மேற்கே கதவு உள்ளது, அது சிறு வழியாக உள்ளதால் மதில் சுவருக்கு கிழபுறமாக உள்ள தென்வடல் தடத்தை கதவு வைத்து பயன்படுத்த வேண்டும்.

10. எனது வீடிற்கு வடக்கே 18 அடி தென்வடலாக உங்கள் வீடு உள்ளது என்றால் தென்வடலாக மேற்கோட்டில் உள்ளது. 7 மீட்டர் நீளத்தில் 3 மீட்டர் அகலத்தில் உள்ளது. 47 X 20 என்று எனது பத்திரத்தில் உள்ளது என்றால் சரிதான், அதன் மத்தில் 25 1/2 அடி அகலம் தென்வடலாக அதிகமாக உள்ளது. அதற்கு ஆவணம் உள்ளது என்றால் உள்ளது. எனது மதில் சுவர் 18 மற்றும் 47 சேர்ந்து தென்வடல் நீளம் 65 அடி என்றால் சரியல்ல. 736/8, 736/9 இரண்டு காலைகளின் தென்வடல் நீளம் மொத்தம் 73 அடி என்றால் சரியல்ல. அவ்வழியாக வந்தால் கிழமேலாக செல்லும் பொது பாதைக்கு வந்து விடலாம் என்றால் சரியல்ல.

11. 736/8, 376/9 காலையில் உள்ள தடம் நீளம் 73 அடி தென்வடலாக உள்ளது. 27.08.1993 ன் ஆவண எண்ணை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதன் எண் என்றால் ஞாபகம் இல்லை. 27.08.1993 ம் ஆவணம் தான் எனது மூல ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் மூலம் தான் மேற்படி சகோதரர் எனக்கு தான செட்டில்மெண்ட் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் 7583/1993 ஆவணத்தை குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 7583/1993 ஆவணம் 06.12.1993 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், 27.08.1993 என்று நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் TN 39 AR 0039 என்ற காரைத்தவிர வேறு எதாவது நிறுத்தப்பட்டுள்ளதா என்றால் இரண்டுசக்கர வாகனம் முதலில் நிறுத்தப்பட்டு இருந்தது தற்போது இல்லை.

12. TN 39 AR 0030 என்று எனது பிரமாணவாக்குமூலம் பத்தி 17 ல் வாகன எண்ணை குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. பத்தி 17 ல் இணைய வழியாக பார்த்தாக சொல்லியுள்ள விபரம் தவறு என்றால் சரியல்ல. 736/9 ன் தென்வடல் நீளம் 14.4 மீட்டர். அதன்

அகலம் 1ம் பிரதிவாதியின் வீட்டின் முன்பு 1.8 மீட்டர், அதன் பிறகு 2 மீட்டர் அகலம். 2 மீட்டர் என்றால் 6.6 அடி அகலம் என்றால் சரியல்ல. 9 அடி தான் இருக்கும். 736/8 ன் அகலம் 11 அடி இருக்கலாம். அதன் நீளம் 33 அடிக்குள் இருக்கும். அகலம் நீளத்தைப்பற்றி எனக்கு தெளியாக தெரியாது. 12 அடி அகலமுள்ள தாவா சொத்தின் கார் நிறுத்தியதாக எதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் தாவா சொத்திற்கு முன்பு 8 அடி நீளத்திற்கு 12 அடி அகலம் உள்ளது.

13. 736/8 ல் தென்வடலில் நுழையும் போது 10 அடி நீளத்திற்கு 12 அடி அகலம் உள்ளது. அதன் பிறகு தென்வடலில் 8 அடி உள்ளது. 2ம் வாதிக்கு அவரது வீட்டில் இருந்து வெளியே வர கதவு இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் பாகப்பிரிவினை பத்திரத்தில் ஏற்கனவே எங்களுக்கு பாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 736/9ல் உள்ள பாதையை பராமரிப்பதற்காக பாதையை நாங்கள் உபயோகித்துவருகிறோம். பராமரிப்பதற்கு பாதை இருந்திருந்தால் ஆவணத்தில் குறிப்பிட்டு இருப்போம் என்றால் ஆவணத்தில் குறிப்பிடவில்லை ஆனால் பல காலமாக உபயோகித்து வருகிறோம்.

14. 1ம் பிரதிவாதியின் 09.06.1951 கிரையப்பத்திரத்தில் வழக்கு சொத்து அவருக்கு பாத்திப்பட்டதாக உள்ளது என்றால் 736/9 மட்டும் பாத்தியப்பட்டது. 736/9ல் எனக்கு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. அது பொதுபாதை. 1ம் பிரதிவாதியின் கிரையப்பத்திரத்தில் அவரது வீட்டில் இருந்து கிழமேல் இட்டேரி வரை தென்வடலாக வண்டி போகும் அளவிற்கு இட்டேரி தடம் உள்ளது என்றால் சரியல்ல. அரசாங்கத்தால் காங்கிரேட் ரோடு போட்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அது எனது தந்தை 2002ல் போட்ட ரோடு என்றால் சரியல்ல. அரசாங்கம் எந்த ஆண்டு போட்டது என்று தெரியாது ஆனால் அரசாங்கம் போட்டது.

15. தற்போது கிழமேல் பாதையில் ரோடு போடப்பட்டுள்ளது என்றால் வழக்கு இருப்பதால் 1ம் பிரதிவாதி நிறுத்திவைத்துள்ளார். அவ்வாறு மாநகராட்சியில் சொன்னார்கள். வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தாயாரையும் மனைவியையும் சீரழிக்கும் நோக்கத்துடம் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யான விபரங்கள் குறிப்பிட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.10.16 12:59:16 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.